# புறப்பாடவிதான செயற்பாடுகளில் பல்கலைக்கழக மாணவர்களின் ஈடுபாடு

## Involvement of Undergraduates in Extra-curricular Activities

A. Ijas Mohamed[1], M.A.F.Ashfa [2], H.M. Paslan[3] & M.S. Zunoomy[4]

[1&4] Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka
[2&3] Department of Arabic Language, South Eastern University of Sri Lanka
ashfaansar6@gmail.com, ijasajeen@gmail.com, faslanhaseem97@gmail.com, zunoomyzain94@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

புறப்பாடவிதான செயற்பாடுகள் ஒரு மாணவனுடைய கல்வி மேம்பாட்டிற்கு உந்துசக்தியாக அமைகின்றது. இவற்றில் மாணவர்கள் ஈடுபாடு காட்டுவதனூடாக தங்களின் திறன்களை மேம்படுத்திக்கொள்ள முடிகின்றது. இதனடிப்படையில் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் புறப்பாடவிதான செயற்பாடுகளில் பட்டதாரிகளின் ஈடுபாட்டை அடையாளப்படுத்தும் முதன்மை நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாய்வு விபரிப்பு முறையியலை மையமாக கொண்டுள்ளது. இவ்வாய்வின் நோக்கத்தை அடையும் முகமாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை சேர்ந்த 80 மாணவர்கள் எழுமாதிரியாக தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு வினாக்கொத்து வழங்கப்பட்டு தகவல்கள் பெறப்பட்டன. இவ்வாய்வில் கலந்துரையாடல், அவதானம் ஆகியனவும் முதல்நிலைத்தரவுகளாக பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகள் ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையக் கட்டுரைகள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் MS Excel மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. புறப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களின் ஈடுபாடு, அச்செயற்பாடுகளில் ஈடுபடுவதின் அவசியம், அதன் மூலம் திறன்களை விருத்தி செய்ய முடிதல் போன்றவற்றை மாணவர்கள் ஏற்றுக்கொண்டாலும் புறப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடுவதில் வழிகாட்டல் இன்மை, ஊக்கப்படுத்தல் இன்மை, பொடுபோக்கு, அலட்சியம், நேரமின்மை, வாய்ப்புக்கள் குறைவு ஆகிய தடைகள் உள்ளன என்பது இவ்வாய்வின் கண்டறிதலாகும். அதேநேரம், உயர்கல்வியைத் தொடரும் பல்கலைக்கழக மாணவர்கள் பல்வேறு புறப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடுவதையும், அதற்கான ஆர்வமும் மாணவர்களிடையே காணப்படுவதையும் இவ் ஆய்வு கண்டறிந்துள்ளது. அவ்வாறே, மாணவர்கள் தங்களது திறன்களை வளர்த்துக் கொள்வதற்காக பீடத்தில் காணப்படும் பல்வேறு அமைப்புகளில் அங்கத்துவம் வகிப்பது புறப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களின் ஆர்வத்தை பறைசாற்றுகிறது. இந்தவகையில் பல்வேறுவிதமான சவால்களுக்கும் சிக்கல்களுக்கும் மத்தியில் மாணவர்கள் புறப்பாடவிதான செயற்பாடுகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவதனை இவ்வாய்வினூடாக அடையாளப்படுத்த முடிகின்றது.

**திறவு சொற்கள்**: புறப்பாடவிதான செயற்பாடுகள், பல்கலைக்கழக மாணவர்கள், வினைத்திறன், பட்டதாரிகள்.

**ஆய்வு அறிமுகம்:**

ஒரு நாட்டின் உயிர்நாடியாக அந்நாட்டின் பல்கலைக்கழகங்கள் அறியப்படுகின்றன. ஒரு நாட்டினுடைய தேசிய மூலதனமாக பல்கலைக்கழகங்களே உள்ளன. வினைத்திறன் மிக்க பட்டதாரிகளை உருவாக்க பல்கலைக்கழகம் முக்கிய பங்கு வகிப்பதோடு அவர்களது வாழ்க்கைக்கு தேவையான பல கலைகளையும் பல்கலைக்கழகங்கள் கற்றுக்கொடுக்கின்றன. இந்தவகையில் பட்டாதாரிகள் பல்கலைக்கழகத்திலிருந்து கல்வியை மாத்திரம் பெற்றுக்கொள்ளாது அதற்கப்பால் உடல், உள, சமூக, பண்பாட்டு வளர்ச்சி ஆகியவற்றை வளர்க்கக்கூடிய பல்வேறு நிகழ்ச்சி திட்டங்களில் பங்குபெறச் செய்வதன் மூலம் அவர்களை பூரண மனிதர்களாக மாற்றமுடியும். இதுவே இணைப்பாடவிதான செயற்றிட்டமாகும் (Tamilan, 2017). இதனை மகாத்மா காந்தி ‘‘கல்வி என்பது முழு மனிதனை வெளிக்கொணர்வது” எனக்கூறியுள்ளார். இதற்கு அவர்களது உடல், உள்ளம், ஆன்மா ஆகியவற்றை ஒருமித்து விருத்தி செய்து ஆளுமையை வளர்ப்பதை நோக்கமாக கொண்டிருக்க வேண்டும் என சுட்டிக்காட்டினார் (லோஜிதா, 2018). அதாவது அவ்வாளுமையை விருத்தி செய்யக்கூடியது புறப்பாடவிதான செயற்பாடுகளேயாகும்.

புறப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடுவது மனஅழுத்தத்தை குறைக்கின்றது. அதில் ஈடுபடுபவர்கள் உடல், உள ரீதியாக வலுப்பெறுகின்றனர். அவர்களுக்கு தன்னம்பிக்கை அதிகரித்து தங்களின் செயற்பாடுகளை சிறப்பாக மேற்கொள்கின்றனர். புறப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபாடாதவர்கள் இவ்வாறான தன்மைகளை பெறுவதில்லை (Daley and Leahy, 2003).

சுறுசுறுப்பாக புறப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுகின்றனர். அவர்கள் தங்கள் பாடவிடயத்தில் கூடுதல் கவனம்செலுத்துகின்றனர். கல்விசார் அடைவுகளை அதிகம் பெறுகின்றனர். அவ்வாறே, இவர்கள் போதை, மது பாவனைகளில் இருந்து தவிர்ந்து இருக்கின்றனர் (Brown, n.d.). புறப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடுவது கல்வி மேம்பாட்டிற்கு மாத்திரம் துணைபுரிவதில்லை. மாறாக, அவர்களது சொந்த மற்றும் சமூக வாழ்வின் மேம்பாட்டிற்கு பங்களிப்பு செய்கின்றது (Logan & Scarborough, 2008). இச்செயற்பாடுகள் மாணவர்களின் சமூக அடையாளங்கள் மற்றும் திறன்களை வளர்த்துக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குகின்றது (Olson, 2008). இவ்வாறு புறப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபாடாத போது, தீய பழக்கங்களுக்கு உள்ளாக நேரிடுகின்றது (Smith, 2008).

இந்தவகையில், பல்கலைக்கழக மாணவர்கள் புறப்பாடவிதான செயற்பாடுகளால் உடல், உள, ஆன்மீக விருத்தி, தலைமைத்துவ பண்பு வளர்தல், ஆளுமை பண்பு உருவாகுதல், சொல்லூக்கம் ஏற்படல், கலையுணர்வு ஏற்படல், சுறுசுறுப்பாக இருத்தல், மொழித்திறன் விருத்தியாகுதல், தன் சுயம் பற்றி அறிந்து கொள்ளல், செயற்பாடுகளை திட்டமிட்டு, ஒழுங்கமைத்து, முகாமை செய்ய வாய்ப்பு ஏற்படல் போன்ற சிறந்த பண்புகளை வளர்த்துக்கொள்ள முடியும்.

ஆய்வுப் பிரதேசமாக அமைகின்ற இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் புறப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. அவற்றில் மாணவர் அமைப்புக்கள், விளையாட்டு கழகங்கள், தமிழ் சங்கம், மாணவர் ஆய்வு மன்றம், முஸ்லிம் மஜ்லிஸ், பீட நூலகம் (Faculty Library), தொழில்வாழ்க்கை மேம்பாட்டு மையம் (Career Development Unit) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இன்று புறப்பாடவிதான செயற்பாடுகளில் அதிக அக்கறை கொள்ளாதவர்களாக மாணவர்கள் பட்டம் பெற்று செல்வதனை அவதானிக்க முடிகின்றது. பட்டம் பெற்று வெளியாகும் மாணவர்களின் தரத்தை, ஆளுமைகளை உருவாக்குவதில் முன்னிலை வகிக்கும் புறப்பாட விதான செயற்பாடுகளில் ஈடுபடுவதில் மாணவர்களின் நிலைப்பாட்டை மதிப்பீட்டாய்வு ரீதியாக முன்வைக்க இவ்வாய்வு முனைகிறது. புறப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபாடு எந்தளவு உள்ளது என ஆய்வு மேற்கொள்ளப்படுவது காலத்தின் தேவையை உணர்ந்து செய்யப்படுவதாக அமைகிறது.

### ஆய்வின் முக்கியத்துவம்.

பொதுவாக பல்கலைக்கழகங்களில் காணப்படுகின்ற புறப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களை ஊக்கப்படுத்த வேண்டிய, ஆர்வமூட்ட வேண்டிய தேவைப்பாட்டை அவதானிக்க முடிகிறது. இவ்வாறு ஊக்கப்படுத்தப்படாமல் இந்நிலை தொடருமாயின் ஆளுமை மிக்க சமூகத்தை கட்டியமுப்ப முடியாத நிலைமை உருவாகும். பட்டம் பெற்று வெளியாகிய பிறகும் ஆக்கபூர்வமான பணிகளை அவர்களால் சமூகத்திற்கு வழங்க முடியாமல் போகும். இந்தவகையில், இவ்வாய்வானது இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் எந்தளவு புறப்பாட விதான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என்பதை அடையாளங்கண்டு அதற்கான காரணங்களையும் கண்டறிந்து அதற்கான சிறந்த தீர்வுகளையும் முன்வைக்க விளைவதனால் இவ்வாய்வு முக்கியத்துவம் பெறுகிறது.

### ஆய்வு பிரச்சினை

பல்கலைக்கழக மட்டத்தில் மாணவர்கள் மத்தியில் புறப்பாடவிதான திறன்களை வளர்த்துக்கொள்வதற்கான வாய்ப்புகள் காணப்படினும் மாணவர்கள் அதில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தாது பொடுபோக்காக, அலட்சியமாக இருப்பதனை அவதானிக்க முடிகிறது. இவ்வெண்ணக்கருவை மையமாக வைத்து இவ்வாய்வுக்கான ஆய்வுப் பிரச்சினை அடையாளப்படுத்தப்படுகின்றது.

### ஆய்வு நோக்கம்

பல்கலைக்கழகத்தில் காணப்படும் புறப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களின் ஈடுபாட்டை கண்டறிதல்.

**ஆய்வுமுறையியல்:**

விபரிப்பு முறையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை சேர்ந்த 80 மாணவர்கள் எழுமாதிரிகளாக தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்து வழங்கப்பட்டன. கலந்துரையாடல், அவதானம் ஆகியனவும் முதல் நிலைத்தரவுகளாக பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகள் ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையக் கட்டுரைகள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் MS Excel மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் புறப்பாடவிதான செயற்பாடுகளில் ஆண், பெண் பட்டதாரிகளது ஈடுபாடு தொடர்பான நேரடியான எந்த ஒரு ஆய்வுகளும் பெற்றுக்கொள்ளப்படவில்லை. ஆயினும் ஏனைய பல்கலைக்கழகங்கள், பாடசாலைகளில் புறப்பாடவிதான செயற்பாடுகள் பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவை பற்றி இலக்கிய மீளாய்வில் கலந்துரையாடப்படுகின்றது.

1. Ahamed M, Rahman MF, Ali M, Rahman FN, Al Azad MAS என்பவர்களால் மேற்கொள்ளப்பட்ட மாணவர்களது கல்வி செயற்திறன் விடயங்களில் புறப்பாடவிதான செய்பாடுகளின் விளைவுகள் (Effect Of Extra Curricular Activity On Student's Academic Performance) எனும் ஆய்வில் கல்வி சாராத செயற்பாடுகளானது நவீன கால கல்வி பாடத்திட்டத்தின் ஒரு முக்கிய பகுதியாகும். இவை மாணவர்களுக்கு அநுகூலத்தை வழங்குகின்றன எனவும் ஒழுக்கம், அர்ப்பணிப்பு, உறுதித்தன்மை, சுயகட்டுப்பாடு ஆகியவற்றை வளர்ப்பதற்கான வழிகளை கற்பிக்கின்றன எனவும் இவ்வாய்வு கண்டறிந்துள்ளது. புறப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற மாணவர்கள் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளை பெறுகின்றனர். பல்வேறு கல்விசார் அடைவுகளைப் பெற்றுக்கொள்கின்றனர். அவ்வாறே, குழுவாக செயற்படுதல், தலைமைத்துவம், நடத்தைபிறழ்வான செயற்பாடுகளில் இருந்து ஒதுங்கிக் கொள்கின்றனர் ஆகியன இவ்வாய்வின் முடிவுரையாக அமைகின்றது.

2. பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் பொதுப்பரீட்சையில் பெறுகின்ற சிறந்த பெறுபேறுகளும், இணைப்பாட விதான செயற்பாடுகளினூடாக அவர்கள் பெறும் சாதனைகளும் அவற்றின் கல்வி அபிவிருத்தியினை வெளி உலகுக்கு பறைசாற்றுகின்றன. இந்தவகையில், கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் காணப்படும் சவால்களை மையப்படுத்தி ஏ. Dharshika என்பவரால் ‘‘வினைத்திறனான மாணவர்களின் வெளியேற்றம், படுவான்கரை பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தியில் ஏற்படுத்தும் தாக்கம்

போறதீவு பற்று கல்விக் கோட்டத்திற்குட்பட்ட 1C வகை பாடசாலைகளை அடிப்படையாக கொண்ட ஆய்வு" எனும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. படுவான்கரைப் பாடசாலைகளைப் பொறுத்தமட்டில் கல்வி மற்றும் கல்விசார் செயற்பாடுகளில் முன்னணியில் திகழும் மாணவர்கள் குடும்ப, சமூக, பாடசாலைக் காரணங்களின் நிமிர்த்தம் இப்பாடசாலைகளை விட்டு வெளியேறிச் செல்கின்றமையானது, இப்பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தியில் பரீட்சைகளின் அடைவு மட்டங்கள் குறைதல், இணைப்பாட விதானச் செயற்பாடுகளின் சாதனை மட்டங்களில் தொய்வு நிலை, கற்றல் சூழல் பாதிப்படைதல், அறிவு இழப்பு ஏற்படுதல் போன்ற பல்வேறு வழிகளில் பாதிப்பை ஏற்படுத்தி விடுகின்றது என இவ்வாய்வு கண்டறிந்துள்ளது.


3. Najun Ul Sakeeb, Musab A. Raheem, Mubeen Iqbal, Muhammad Salman, Thayyab Shahzad என்பவர்களால் மேற்கொள்ளப்பட்ட "மாணவர்கள் மீது புறப்பாட விதான செயற்பாடுகள் செலுத்தும் தாக்கம்" எனும் ஆய்வில் புறப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடுவதால் கிடைக்கும் நன்மைகள், புறப்பாடவிதான செயற்பாடுகளுக்கான வாய்ப்புக்கள் போன்றன தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன. சிறந்த கல்வி அடைவுகள், பாடங்களுக்கு தொடர்ச்சியாக சமூகமளித்தல், தன்னம்பிக்கை, தலைமைப்பண்பு போன்ற பலன்களை புறப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற மாணவர்கள் பெறுகின்றனர். போதைப்பொருள் பாவனை, மதுபானப் பாவனை, துர்நடத்தைகள் குறைவதற்கு காரணியாக உள்ளது என இவ்வாய்வு அடையாளப்படுத்துகின்றது.

மேற்குறிப்பிட்ட மூன்று ஆய்வுகளும் எமது ஆய்வுக்கு பெரிதும் துணைபுரிந்தன. அதாவது புறப்பாடவிதான செயற்பாடுகள், அதன் மூலம் மாணவர்கள் பெறும் நன்மைகள், அதற்கான வாய்ப்புகள், அதனை மேலும் அதிகரிப்பதற்கான பரிந்துரைகள் என்பன பெற்றுக்கொள்ளப்பட்டன. எனினும், எமது இவ்வாய்வானது மேற்கூறப்பட்ட ஆய்வுகளில் இருந்து வேறுபட்டு அமைகின்றது. அதாவது, உயர்கல்வியைத் தொடரும் பல்கலைக்கழக பட்டதாரிகளிடத்தில் காணப்படும் புறப்பாடவிதான செயற்பாடுகள் மீதான ஈடுபாட்டினை முன்வைக்கும் ஆய்வுகளின் ஆய்வு இடைவெளியை மையப்படுத்தியதாக இவ்வாய்வு அமைகின்றது.

**பெறுபேறுகளும் கலந்துரையாடலும்:**


இவ் ஆய்வுக்காக 80 வினாக்கொத்துகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. அவற்றுள் 72 வினாக்கொத்துகள் கிடைக்கப்பெற்றன. புறப்படவிதான செயற்பாடுகளில் மாணவர்களது ஈடுபாடு தொடர்பாக வினவப்பட்ட போது அவர்களில் 69% ஆனவர்கள் தங்கள்

பல்கலைக்கழகத்தில் அதிகளவில் புறப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடுவதாகவும், ஏனைய 31% ஆனவர்கள் அதிகளவில் புறப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடுவதில்லை எனவும் கருத்துரைத்தனர். இதனை வரைபு (1) விபரிக்கின்றது.





வரைபு (1) புறப்பாடவிதான செயற்பாடுகளில் அதிகம் ஈடுபடல்

இவ் ஆய்வில் பல்கலைக்கழக மாணவர்கள் புறப்படவிதான செயற்பாடுகளில் ஈடுபடுவது அவசியமாகும் என்ற கருத்தில் வினவப்பட்ட போது, அதில் 79% ஆன மாணவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் புறப்படவிதான செயற்பாடுகளில் ஈடுபடுவது அவசியமாகும் என்பதில் முழுமையாக உடன்படுவதையும், 14% ஆனோர் உடன்படுவதையும், 7% ஆனோர் ஓரளவு உடன்படுவதையும் வரைபு (2) விளக்குகிறது.





வரைபு (2) புறப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடுவது அவசியம்

புறப்படவிதான செயற்பாடுகளின் மூலம் பல்கலைக்கழக மாணவர்கள் தங்கள் திறன்களை விருத்தி செய்து கொள்ளவது தொடர்பாக கேட்கப்பட்ட போது, அவர்களில் 85% ஆனவர்கள் புறப்படவிதான செயற்பாடுகளின் மூலம் பல்கலைக்கழக மாணவர்கள் தங்கள் திறன்களை விருத்திசெய்து கொள்கின்றனர் என்பதில் முழுமையாக உடன்படுவதாகவும், 8% உடன்படுவதாகவும், மிகுதி 7% ஓரளவு உடன்படுவதாகவும் கருத்து தெரிவித்தனர். இதனை வரைபு (3) விபரிக்கின்றது.





வரைபு (3) திறன்களை விருத்தி செய்தல்.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் போதியளவான புறப்படவிதான செயற்பாடுகள் காணப்படுகின்றன என்ற கூற்றில், 10% ஆனவர்கள் முழுமையாக உடன்படுவதாகவும், 25% ஆனவர்கள் உடன்படுவதாகவும், 43% ஆனவர்கள் ஓரளவு உடன்படுவதாகவும், 21% ஆனவர்கள் உடன்படவில்லை எனவும், 1% ஆனவர்கள் முழுமையாக உடன்படவில்லை எனவும் விடையளித்தனர். இதனை வரைபு (4) இல் காண முடியும்.





வரைபு (4) போதியளவான புறப்பாடவிதான செயற்பாடுகள் உள்ளன.

பல்கலைக்கழக மாணவர்கள் புறப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடுவதில் காணப்படும் தடைகள் தொடர்பான வினவப்பட்ட போது, அதில் 45% ஆனவர்கள் எவ்வித தடைகளும் இல்லை எனக் கூறினர், 19% ஆனவர்கள் தடைகள் இருப்பதில் உடன்படுபவர்களாகவும், ஓரளவு உடன்படுபவர்களாகவும் உள்ளனர். தடைகள் இல்லை என்பதை மறுத்து 14% ஆனவர்கள் உடன்படுவதில்லை எனவும் 02% ஆனவர்கள் முழுமையாக உடன்படுவதில்லை எனவும் தெரிவித்தனர். இதனை வரைபு (5) தெளிவாக விளக்குகிறது.





வரைபு (5) புறப்பாடவிதானத்தில் ஈடுபடுவதில் தடைகள் இல்லை

பல்கலைக்கழகத்தில் பங்குபற்றிய விளையாட்டுக்கள் பற்றி கேட்கப்பட்ட போது ஆண்களும் பெண்களும் பல்வேறு விளையாட்டுக்களை குறிப்பிட்டனர். அவர்கள் குறிப்பிட்ட விளையாட்டுக்கள் கீழே வரைபு (6) இல் காட்டப்பட்டுள்ளன. அதிகமானோர் Badminton மற்றும் Carom விளையாட்டுக்களையே தாம் பங்குபற்றிய விளையாட்டுக்களாக குறிப்பிட்டதுடன் Cricket, Volleyball போன்றவற்றையும் இன்னும் குறைவான மாணவர்கள் Netball, Football, Table Tennis, Chess, Basketball போன்றவற்றையும் தாம் பங்குபற்றிய விளையாட்டுக்களாக கூறினர். இதனை கீழுள்ள வரைபு (6) தெளிவுபடுத்துகின்றது.





வரைபு (6) ஈடுபாடுகாட்டுகின்ற விளையாட்டுக்கள்

அதேவேளை பல்கலைக்கழகத்தில் புறப்படவிதான செயற்பாடுகளில் ஈடுபடுவதில் உள்ள தடைகள் பற்றிய கருத்துக் கணிப்பு மேற்கொள்ளப்பட்ட போது, வழிகாட்டல் இன்மை என்பது பிரதான தடையாக அமைகின்றது. அதனைத் தொடர்ந்து, ஊக்கப்படுத்தல் இன்மை, பொடுபோக்கு, விருப்பமின்மை ஆகிய விடயங்களும் மாணவர்கள் புறப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபாடு காட்டுவதில் தடைகளாக அமைகின்றன. இதனை பின்வரும் வரைபு (7) தெளிவுபடுத்துகின்றது.




வரைபு (7) தடைகள்

இவ்வாறு புறப்படவிதான செயற்பாடுகள் பற்றிய இவ் ஆய்வில் மாணவர்களின் திறன்களை வளர்ப்பதற்காக பீடத்தில் காணப்படும் அமைப்புகள் பற்றி மேற்கொண்ட தகவல் திரட்டலில், பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அதிகமானோர் Student Research Forum for Social Researches மாணவர்களின் திறன்களை வளர்ப்பதில் கணிசமான அளவு பங்காற்றுவதாக குறிப்பிட்டுள்ளனர். அதே வேளை Muslim majlis , faculty library, Career development unit, sports clubs, student union போன்ற அமைப்புகளும் மாணவர்களின் திறன்விருத்திக்கு பங்காற்றுவதாக குறிப்பிட்டுள்ளனர். இதனை வரைபு (8) அடையாளப்படுத்துகிறது.




வரைபு (8) பல்கலைக்கழக அமைப்புகள்

**முடிவுரை:**

உயர்கல்வியைத் தொடரும் பல்கலைக்கழக மாணவர்கள் பல்வேறு புறப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடுவதையும், அதற்கான ஆர்வமும் மாணவர்களிடையே காணப்படுவதையும் இவ் ஆய்வு கண்டறிந்துள்ளது. அவ்வாறே, மாணவர்கள் தங்களது திறன்களை வளர்த்துக் கொள்வதற்காக பீடத்தில் காணப்படும் பல்வேறு அமைப்புகளில் அங்கத்துவம் வகிப்பது புறப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களின் ஆர்வத்தை பறைசாற்றுகிறது. அந்தவகையில் பல்வேறுவிதமான சவால்களுக்கும் சிக்கல்களுக்கும் மத்தியில் மாணவர்கள் புறப்பாடவிதான செயற்பாடுகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவதனை இவ்வாய்வினூடாக அடையாளப்படுத்த முடிகின்றது.

**பரிந்துரைகள்:**

புறப்பாடவிதான செயற்பாடுகள் குறித்து சிறந்த வழிகாட்டல்கள் வழங்கப்படும் போது மாணவர்கள் தமது கல்விச் செயற்பாடுகள் போன்றே புறப்படவிதான செயற்பாடுகளிலும் அக்கறை காட்டுவதற்கு காரணமாக அமையலாம். எனவே வினைத்திறனான அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு அல்லது பல்கலைக்கழகத்தில் காணப்படும் அமைப்புக்கள் மூலம் தொடராக மாணவர்கள் புறப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபட தூண்டுவதன் மூலம் குறிப்பாக பீடம் மூலமாக வழிகாட்டல்கள் வழங்கப்படும் பட்சத்தில் மாணவர்கள் கூடுதல் கவனம் செலுத்த ஏதுவாக அமையும்.

புறப்பாடவிதான செயற்பாடுகளின் முக்கியத்துவம் பற்றிய தெளிவை மாணவர்களிடத்தில் எடுத்துரைத்தல் மற்றும் புறப்பாடவிதான செயற்பாடுகளில் அதிகமாக ஈடுபடுபவர்களுக்கு பரிசில்கள், வெகுமதிகள் வழங்குவதன் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தல். திறமையானவர்களுக்கு சந்தர்ப்பமும் வாய்ப்பும் வழங்குதல்.

பெண் மாணவிகளுக்கு அதிக வாய்ப்பும் உற்சாகமும் வழங்குதல். விளையாட்டுத் துறைக்கான ஒரு சிறந்த குழு நியமிக்கப்பட்டு அதனூடாக மாணவர்களுக்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். அவ்வப்போது போட்டிகளை ஒழுங்குபடுத்தி மாணவர்களை ஆர்வப்படுத்துவதினூடாக அவர்களை அப்போட்டிகளில் கலந்துகொள்ளச் செய்ய முடியும்.

**உசாத்துணைகள்:**

கிருஷானா. க. (2018). *பாடசாலைகளில் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் ஊடாக மனித விழுமிய மேம்படுத்தப்படுத்தப்பட வேண்டும்.* Retrieved from: https://kalmunai.net.com, on 10/11/2020

சின்னத்தம்பி, மா. (2008). *பாடசாலையும் சமூகமும்.* கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

செல்வராசா, லோஜிதா. (2018). *இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் முக்கியத்துவம்.* Retrieved from: http://www.battinews.com/2018/11/blog-post_994.htm?m=1, on 10/11/2020.

தமிழன், (2017). *பாடசாலை இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் முக்கியத்துவம்.* Retrieved from: http://www.tamilan24.com/m/news/104528, on 9/11/2020.

ரஹ்மதுள்ளாஹ், ரீ.கே. (2014). *கற்றல் செயற்பாடு மட்டும் ஒரு மாணவனை ஆளுமையுள்ளவனாக்காது.* Retrieved from: http://www.tamilmirror.lk, on 9/11/2020.

Sayanolipavan. (2018). *மாணவர்களின் ஆளுமை விருத்தியில் இணைப்பாட விதானத்தின் பங்களிப்பு.* Retrieved from: http://www.battinews.com/2018/11/blog-post_64.html?m=1, on 10/11/2020.